(அ) மற்றும் (ஆ) தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் எங்கெல்லாம் அங்கன்வாடி மையங்கள் வாடகைக் கட்டடங்களிலும், வாடகை இல்லாத கட்டடங்களிலும் இயங்கி வருகின்றனவோ, அங்கெல்லாம் அங்கான்வாடி மையங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, காளாச்சேரி ஊராட்சியில், காளாச்சேரி, காளாச்சேரி மேலத்தெரு, மேலப்பூவனூர் மற்றும் சோத்தரை (குறு மையம்) ஆகிய 4 அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் சோத்தரை அங்கன்வாடி மையம் மட்டும் வாடகைக் கட்டடத்திலும், இதர 3 அங்கன்வாடி மையங்கள் அரசு சொந்தக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. சோத்தரை (குறு மையம்) அங்கன்வாடி மையம் 2007 ஆம் ஆண்டு முதல் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 200, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

200—

கல்வியியல் கல்லூரி

***3941—திரு. அ. பாஸ்கர்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியில் ஆசிரியர் கல்வியியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2013 ஏப்ரல் 10]

தமிழ்நாட்டில் 7 அரசு கல்வியியல் கல்லூரிகளும், 14 அரசு உதவிபெறும் கல்வியியல் கல்லூரிகளும், 651 சுயநிதிக் கல்வியியல் கல்லூரிகளும், ஆக மொத்தம் 672 கல்வியியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 28 சுயநிதிக் கல்வியியல் கல்லூரிகள் இருக்கின்றன. அங்கே 2,990 மாணவர்கள் சேர்ந்து படிக்க வசதியிருக்கிறது. தற்போது 2,842 மாணவர்கள் சேர்ந்து படித்து வருகிறார்கள். ஆகவே, கல்வியியல் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், தருமபுரி மாவட்டத்தில் கூடுதலாக 148 மாணவர்களுக்கு ஏற்கெனவே காலியாக இடம் உள்ளது. ஆகவே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், கல்வியியல் கல்லூரிகளில் படிப்பதற்கு மாணவர்கள் சேர்க்கைக்குப் போதுமான வகையில் கல்வியியல் கல்லூரிகள் இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

முற்பகல் 10–30

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, கல்வியிலே பின்தங்கிய மாவட்டம், தருமபுரி மாவட்டம் என்பதைத் தாங்கள் நன்கு அறிவீர்கள். ஏறக்குறைய தருமபுரியிலே மட்டும் புதியதாகத் தொடங்கப்பட்டிருக்கிற நான்கு கல்லூரிகளையும் சேர்த்து 20 கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. பக்கத்து மாவட்டமான கிருஷ்ணகிரியிலும் 20–க்கும் மேற்பட்ட கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. கலைக் கல்லூரியில் பட்டப் படிப்பு முடித்து வருகின்ற மாணவர்கள் எளிதாக அரசு கல்வியியல் கல்லூரியில் படிப்பதற்கு ஏதுவாக தருமபுரியை மையமாக வைத்து ஒரு கல்வியியல் கல்லூரி தொடங்கும்பட்சத்தில், 2,800 மாணவர்கள் மட்டுமல்ல, பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இத்தகைய கல்வி பயில்வதற்கு ஏதுவாக இருக்கும்.*

இன்னும், தனியார் கல்வியியல் கல்லூரியில் படிக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கான கட்டணம் மற்றும் போக்குவரத்து வாகனச் செலவுகள் போன்ற வசதிகள் இல்லாமல்

[*2013 ஏப்ரல் 10*

ஏழை மாணவர்கள் பி.எட். படிப்பதற்கு இன்றைக்கு அசௌகரியம் ஏற்பட்டிருக்கின்ற நிலையில், இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலித்து, தருமபுரியிலே ஓர் அரசு ஆசிரியர் கல்வியியல் கல்லூரி அமைக்க முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் கல்வியில் பின்தங்கிய மாவட்டம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னார்கள். தருமபுரி மாவட்டம், கல்வியில் பின்தங்கிய மாவட்டம் என்ற காரணத்தால்தான், கல்வியில் முன்னேறி வருகின்ற மாவட்டம் என்ற அடிப்படையிலேதான், யாரும் எதிர்பார்க்காத அளவுக்கு நான்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தந்து அந்த மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். அதுவும் குறிப்பாக, பெண்கள் அதிகமாகப் படிக்க வேண்டுமென்று, காரிமங்கலத்தில் ஒரு பெண்கள் அரசு கலைக் கல்லூரியைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்புகூட கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கும் சேர்த்து, அந்தப் பகுதியிலுள்ள மாணவர்களின் தேவை அறிந்து ஒசூரிலே ஒரு புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி தந்திருக்கிறார்கள்.*

அதோடு மட்டுமல்ல, கல்வியியல் கல்லூரியில் படிப்பதற்கு அரசுக் கல்லூரி வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். பொதுவாக, தமிழ்நாட்டில் 7 அரசு கல்வியியல் கல்லூரிகள் இருக்கின்றன. அந்தக் கல்வியியல் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை என்பது, ஏழு கல்லூரிகளுக்கும் சேர்த்து ஒட்டுமொத்தமாக விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவர்களுடைய மதிப்பெண்கள் அடிப்படையிலும், இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலும்தான் நடைபெற்று வருகிறது.

கட்டணம் அதிகமாக இருக்கிறது என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக, முன்பெல்லாம் கல்வியியல் கல்லூரிக்குக் கட்டணம் நிர்ணயிக்கப்படாமல் இருந்தது. கிட்டத்தட்ட ஐந்து, ஆறு ஆண்டுக் காலமாக கல்வியியல் கல்லூரிக்கென கட்டணங்கள் அரசு மூலமாகவோ அல்லது கல்விக் கட்டண நிர்ணயக் குழு மூலமாகவோ முறையாக

2013 ஏப்ரல் 10]

நிர்ணயிக்கப்படாமல் இருந்தது. இதனை அறிந்த மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், தனியார் கல்வியியல் கல்லூரிக்குக்கூட கட்டணம் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று ஓர் ஆணை வெளியிட்டார்கள். அந்த அடிப்படையில்தான், ஓய்வு பெற்ற நீதிபதி திரு. என்.வி. பாலசுப்பிரமணியன் தலைமையில் அமையப்பெற்ற கல்விக் கட்டணக் குழுவின் முடிவின்படி கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. கட்டணத்தைப் பொறுத்தவரையில், அரசு கல்வியியல் கல்லூரிக்கு 2,250 ரூபாயும், அரசு உதவி பெறுகின்ற கல்லூரிக்கு 24,000 ரூபாயும், தனியார் கல்வியியல் கல்லூரியைப் பொறுத்தவரையில், தரச் சான்றிதழ் பெற்ற இளநிலை கல்வியியல் பட்டப்படிப்பிற்கு 46,500 ரூபாயும், தரச் சான்று இல்லாத இளநிலை கல்வியியல் பட்டப்படிப்பிற்கு 41,500 ரூபாயும் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டணத்தையும் அந்தக் கல்விக் கட்டணக் குழுதான் நிர்ணயித்திருக்கிறது.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருமபுரி, கிருஷ்ணகிரியை மையமாக வைத்து ஓர் அரசு கல்வியியல் கல்லூரி வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எனக்கும் அந்த ஆசை இருக்கிறது. இல்லையென்று சொல்லவில்லை. இருந்தாலும்கூட, தேவைக்கேற்ப, மாணவர்களுடைய எண்ணிக்கை உயர்வுகளுக்கேற்ப, எதிர்காலத்தில் அங்கே கல்வியியல் கல்லூரி தொடங்குவது குறித்து மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, உயர் கல்வியிலே அரசாங்கத்தினுடைய பங்களிப்பு கணிசமான அளவுக்கு உயர்ந்து வருகிறது. அதற்கான அறிவிப்புகளையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்களும் செய்தார்கள்.*

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது சொன்னதுபோல, தமிழ்நாட்டிலே ஏழு அரசு கல்வியியல் கல்லூரிகள்தான்

இருக்கின்றன. அவற்றில் வசூலிக்கப்படக்கூடிய கல்விக் கட்டணத்திற்கும், சுய நிதிக் கல்வியியல் கல்லூரியிலே வசூலிக்கப்படக்கூடிய கல்விக் கட்டணத்திற்குமிடையே மிகப் பெரிய இடைவெளி இருக்கக்கூடிய சூழ்நிலையில், அரசாங்கத்தினுடைய கொள்கையை இந்த விஷயத்திலே சற்று தளர்த்தி, மாவட்டந்தோறும் அரசு கல்வியியல் கல்லூரிகள் தொடங்குவதற்கு இந்த அரசு முன்வருமா? அப்படி வரும்பொழுது, அரசு கல்வியியல் கல்லூரி இல்லாத இராமநாதபுரம் மாவட்டத்திலே அரசு கல்வியியல் கல்லூரி தொடங்குவதற்கு இந்த அரசு முன்வருமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, தமிழ்நாட்டில் மொத்தம் 672 கல்வியியல் கல்லூரிகள் இருக்கின்றன. ஆனால், அரசு கல்வியியல் கல்லூரிகள் ஏழுதான் என்று சொன்னேன். அவற்றில், மாணவர்களுக்கு 1,169 இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அரசு உதவிபெறும் கல்லூரிகளில் 1,818 இடங்கள் இருக்கின்றன. தனியார் கல்லூரிகளில் 66,157 இடங்கள் இருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஒட்டுமொத்தமாக 69,144 மாணவர்கள் கல்வியியல் கல்வி பயிலுவதற்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 10—35

கட்டணத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஏற்கெனவே மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக்கு முன்பு, தனியார் கல்வியியல் கல்லூரிகளில் கட்டணம் நிர்ணயிக்கப்படாமல் இருந்தது. ரூ.1.00 இலட்சம், ரூ.70,000/– மற்றும் ரூ.60,000/– என கட்டணம் வசூலிக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட, சட்டமன்றத்தில் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதனை அறிந்துதான் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், தனியார் கல்வியியல் கல்லூரிகளில் கட்டணம் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று ஆணையிட்டார்கள். அதன் அடிப்படையிலேதான், நான் ஏற்கெனவே அவையில் தெரிவித்ததுபோல், ஓய்வுபெற்ற நீதிபதி திரு. என்.வி. பாலசுப்பிரமணியன்

2013 ஏப்ரல் 10]

அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு, அந்த கமிட்டியானது எந்தவகையில் கட்டணம் நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கல்வியியல் கல்லூரிகளிடமிருந்து மனுக்கள் பெற்றும், மாணவர்களிடமிருந்து மனுக்கள் பெற்றும், ஆய்ந்து, கட்டணத்தை நிர்ணயித்திருக்கிறது. அதனுடைய அடிப்படையிலேதான், தரச் சான்றிதழ் பெற்ற இளநிலை கல்வியியல் பட்டப் படிப்பிற்கு ரூ.46,500/– எனவும், தரச் சான்றிதழ் இல்லாத இளநிலை கல்வியியல் பட்டப் படிப்பிற்கு ரூ.41,500/– எனவும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கட்டணத்தைப் பொறுத்தவரை, அரசு நிர்ணயிக்கவில்லை. கல்விக் கட்டணக் குழுதான் நிர்ணயித்திருக்கிறது. மாணவர்களைப் பொறுத்தவரை, கல்வியியல் கல்லூரிகளில் சேர்ந்து கல்வி பயில்வதற்கு அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். இந்தச் சூழ்நிலையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், எங்கெல்லாம் கல்வியியல் கல்லூரிகள் அரசாங்கத்தின்மூலம் தொடங்கப்பட வேண்டுமோ, அங்கெல்லாம் தொடங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று ஆலோசிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 201, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

201—

வேளாண்மைக் கல்லூரி

***26518—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*